உ

குருவே துணை.

# தமிழலங்காரம்.

## தமிழ்த்துதிப்பதிகம்.

இவை

வண்ணச்சரபம்

திருப்புகழ்ச்சுவாமிகள் முருகதாசசுவாமிகள்

எனவழங்கும்

ஸ்ரீலஸ்ரீ

தண்டபாணிசுவாமிகள்

திருவாய்மலர்ந்தருளியன.

உடுமலைப்பேட்டை

சண்முகவேலுப்பிள்ளையவர்கள்

பொருளுதவிகொண்டு,

சென்னை

சைவவித்தியாநுபாலனயந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டன.

ஆனந்த௵ பங்குனி௴

1915.

நூல் நிலையம்,
சென்னை - 600 030.
0-110
3199
C8268

குருவே துணை.

# முகவுரை.

"தமிழலங்காரம்," என்னுடைய இந்நூற் பெயரானது
...ற்றுமைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்
தொகை. என்னை? தமிழ்ப் பாஷையினது
...மையை நன்குவிளங்கக்காட்டி யலங்கரிக்கு நூல
...ரியும் ஆகலான்.

திருப்பு ...() நூலியற்றியவர் திருநெல்வேலியிற் றிருவவ
...ருசெய்து முருகக்கடவுளின் றிருவருட் பெருஞ்
...வத்திற்றிளைத்து அளவற்ற அரிய செந்தமிழ்ப்
...வல்களியற்றி வண்ணக்கவிச் சரபவள்ளலென் றுல
சீ ...ஞர் வாழ்த்த விளங்கிப் பதினேழு வருடங்கட்கு
... திருஆமாத்தூர் எனனும் சிவதலத்தில் லிங்கிய
...மடைந்துள்ள திருப்புகழ்ச் சுவாமிகள் முருகதாச
சுவாமிகளென வழங்கும் ஸ்ரீமத், தண்டபாணி சுவாமி
கள். ஸ்ரீ அருணகிரிநாதர் கந்தரலங்காரம் என்ற பெய
...ட்டு நூறு கலித்துறைகளான் முடித்தாங்கு, இங்குத
...மிழலங்காரமு முடிக்கப்பட்டுள்ளது. அன்றியும், வே
...லங்காரம், மயிலலங்காரம், வாளலங்காரம், அலங்கா
...ம், என்று பலநூல்களிவரா லியற்றப்பட்டுள்ளன.
...ற்றினுள் இத் தமிழலங்காரப்பனுவ லியற்றிய
...ணம் இவராலியற்றப்பட்ட அநுபூதி விளக்க சரி
நூலாகிய குருபரதத்துவக் காவியத்திற் கீழ்க்கண்ட
...விகளால் விளக்கியுள்ளார். அவை வருமாறு:—

# முகவுரை.

"ஊரூர் சோறும் பலவடியா ருடன்போய்ப் பூசித் தமு
துண்டு, சீரூர் பதிகம் பலபாடிச் சிலர்வாழ்ந் துவக்கச் சிலர்தா
ழ்த், தாரூர் கவியுஞ் சிலகூறித் தவர்சூ ழருணைத் தலத்தின்வழி,
காரூர் பொழில்வே லூரினிற்போய் வசித்துச் சிலநாள் களிப்
புற்றேன்.

அவ்வூர்ப் பதிகந் திருப்புகழ்ப்பாட் டமுதச் சித்தர் துதி
முதலாத், தெவ்வூ ரொழிய நிமித்தமிகச் செப்பி யுறல்கேட் டிரு
புலவர், செவ்வூழ்ப் பனைவன் வேளாள னென்னுங் குலத்தார்
தேடிவந்து, வெளவூ கத்தால் வடமொழியே வலிதென் றென்
பால் வாதித்தார்.

வேதம் பிறந்த ததிலென்றார் மேட மருந்தத் தமிழ்வேதத்
தோத லிலையென் றுரைத்தேனக் காலோ பத்த தனைதென்று
ராத லெகர வொகரத்தா லதனி லிலையோ வெனக்கேட்டேன்
வாத முடிந்த திலையிரவு மாறிப் பகலும் வந்ததுவே.

முருகப் பெருமான் முழு துணர்ந்த புலவ னெனுஞ்சொன்
முன்னியதா, லிருகட் சியுமொத் தவன்புனைவே லிடத்திற் சேட்
போ மெனத்துணிந்தாங், கொருபக் கஞ்சொ லிரண்டுமொத்த
தோன்றுங் காலங் குலநாடு, மருவு மானம் பகர்நான்கு மாமேழ்
ட்டு வரைந்ததன் முன்.

போட்டா ருடனங் கொருவனைவிட் டெடுக்கச் சொன்னார்
பொருகணைவேல், வாட்டா னெனுங்கட் சிறுமடப்பெண் வந்தே
யெடுக்க வேண்டுமென்றேன், மாட்டா ரோடி யழைத்துவந்தார்
மணிப்பொற் பணியுங் கலையுமணிந், தேட்டார் தவளக் கமல
மிசை யிருப்பா ளிவளே யெனுமாறே.

# முகவுரை.

உற்றத் தமிழே யுயர்ச்சியெனு மொருசீட் டெடுத்தா ளுட னவர்நின், பற்றுக் குரிய மூர்த்திநின்பாற் பகர்ந்த தென்னூர் பயி னுத, மற்றுக் கிடந்த பொருளெனக்கே சொந்த மான தருமை யெனச், சொற்றுச் சீட்டைக் கண்ணிலொற்றித் தலைமேற் றரித் துத் துய்த்தப்பால்.

சீட்டி லிருந்த மொழியீற்றிற் றிகழு மருமைத் திருப்புக ழோர், பாட்டும் வரைந்து தமிழலங்கா ரமும்பின் பகர்ந்தேன்.”

என்று திருவாய்மலர்ந்தருளியுள்ளார்.

இக்கதையின் குறிப்பை யுள்ளடக்கி இத்தமிழலங் கார நூலின் முதற்கவியில், “செந்தமி ழேயுயர் வென்று முன் னொரு சீட்டெனக்குத், தந்தனன் கந்தன் றவளமின் சாட்சி சரதங்கண்டோர்” என்றனர்.

இத்தகை யநுபவத்தைக்கொண்டுதான் இவர் தா மியற்றிய புலவர் புராணத்தின் பொதியாசலப் படலத் தில், “கவிஞர் தீஞ்சொற் பாமுதிர்பல் கலைப்பெருக்கிற் றமிழ்போலும், பலையினத்தின் மலையும்” என்றும், அறு வகை யிலக்கணத்தில் ஆறாவதாகிய புலமை யிலக்கணத் தின், தனிறியல்பில், “தமிழ்மொழிக்குயர்மொழி தானி யிலுளதெனில், வெகுளியற் றிருப்போன் வெறும்புல வோனே” என்றும் பலவாறு கூறியதாம். இந்த நூலின் அருமை நோக்கி அச்சிட்டு வெளியிடத் துணிந்த உடுமலைப்பேட்டை, சண்முகவேலுப் பிள்ளையவர்களின் நன்றியை நாம் என்று மறவோமாக. சுபம்.

இங்ஙனம்,

மேற்படி சுவாமிகளின் மாணாக்கனும் குமாரனுமான

☞ தி. மு. செந்திநாயகம்பிள்ளை.

குருபாததேபகதி.

# சாத்துகவிகள்.

இந்நூலாசிரியசுவாமிகள் குமாரர்

## தி. மு. செந்திநாயகம்பிள்ளையியற்றியன.

### வெண்பா.

தமிழலங்கா ரப்பனுவற் சாரந் தெரிவோர்
சிமிழலங்கா ரத்தனத்திற் சிக்கா—ரமிழ்தனைய
பாடற் புலவர் பலருக் கரசாகி
யாடற் சிறப்புநாற்று வார்.

### சந்தக்கவி.

தனதனந் தானத் தனத்தந்த தானனே.

வலைமிகொண் டனத் தனத்தொன்று வேலைநீள்
கருணைவண் காரொத் திருட்சிந்தை தேறவே
யவமறுஞ் சீலத் திருக்கண்கொ டாள்பிரா
னபிநயஞ் சேர்கைக் குறிப்பொங்க நீடுகோ
பவமில்செங் காவிக் கலைப்பண்பு கீளொடேர்
பரவுதண் டார்வப் பொடித்தண்கௌ பீனமார்
தவமிகுங் கோலத் தனித்தண்ட பாணியோர்
தமிழலங் காரத் திளைத்தந்த தாகுமே.

முற்றிற்று.

உ

குருவேதுணை.

தமிழலங்கார நூலின் ஏதுவாகிய

# அற்புதத்திருப்புகழ்.

## குழிப்பு.

தனதான தத்ததந்த தாத்தத் தனத்த - தனதான.

உலகோர்கண் மெச்சுபைம்பொன் வேட்கைக் குளுற்று
மகமேரு வொத்தகொங்கை காட்டிப் பகட்டி
யுழைபோல்வி ழிக்குமங்கை மார்க்குட் சலித்து - மெலியாதே

யுயர்சோலை சுற்றுகுன்ற மேற்கட் டிவைத்த
பலகோயி லிற்புகுந்து ளுக்கத் தைமெச்சி
யுமைகேள்வர் பெற்றவொன்றை நோக்கிக் கிடப்ப-தொழியாதே

பலவூனு ணத்துணிந்த மூர்க்கப் பிணக்கர்
குலநீறெ ழச்சினந்து தாக்கற் குதித்த
பரிசாளர் முற்பகர்ந்த பாட்டைப் பழிக்க நினையாதே

பணிவேய்வ னத்தில்வந்து நீற்றைக் கொடுத்தொர்
கிளிதானெ னச்சொலுன்றன் வார்த்தைக் கிடக்கர்
பழுதோது முற்சிறந்த பேற்றைத் தரற்கு - வருவாயே

மலரோன ழக்கரங்க ளாற்குட் டிவெற்பி
லொருநீள்கு கைக்குளன்று போட்டுக் களித்து [வோனே
மழுமால்வி டைக்கண்வந்த மூர்த்திக்கொர் மெய்ச்சொல் - பகர்

வழுவாத பத்திகொண்டு போற்றித் தவித்த
கவிவாண னுக்கிரங்கி வேற்றொட் டெழுத்தர்
மனநோவ றப்புரிந்த கீர்த்திப் பெருக்க - முடையோனே

சலமாறி டத்துமன்ப ராற்சித் தியற்றி
யிமவான ளித்தமங்கை பாற்செப் பையொத்த
தனவாயு றக்கொளந்த நாட்பொற் பிலுற்ற - முருகோனே

தனிவாச முற்றதென்ற லாற்றற் படைத்த
பொதியாச லத்திலன்று தோற்றிப் பழுத்த
தமிழேயு யர்ச்சியென்று சீட்டுக் கொடுத்த - பெருமாளே.

வேலுமயிலுந் துணை.

உ

குருவே துணை.

# தமிழலங்காரம்.

## காப்பு.

இமிழலங் கார மதநீ ரருவிக ளெப்பொழுது
முமிழலங் காரத் தலைக்கண நாதனை யுன்னுகின்றேன்
சிமிழலங் கார முலையார் மொழியினுந் தித்திப்பதாந்
தமிழலங் காரக் கவிநூறு நன்கு தருவதற்கே.

## நூல்.

செந்தமி ழேயுயர் வென்றுமுன் னாளொரு சீட்டெனக்குத்
தந்தனன் கந்தன் றவளமின் சாட்சி சாதங்கண்டீர்
சந்தனக் குன்றின் முனிக்கோன்மற் றொன்றைச் சரிசொலினு
முந்தறி வற்றன னென்றே துணிந்து மொழிகுவனே. ௧

தென்பாக மேவல மென்று வடமொழிச் சீருணர்ந்தோ
ரன்பா லுரைத்திடக் கேட்டுந் தமிழ்ச்சுவை யாய்ந்தவர்சேர்
வன்பார் மடமை மலிவா லதனை வலந்தினதா [ழையே.
மென்பாரிம் மாற்றமென் கொல்லோவெண் டாமரை யோதி

வடகலை தென்கலை யென்னும் வழக்கு வயிணவத்தி
னிடமல தில்லை யிரண்டு கலையு மியற்றிருவர்
தொடர்பொழு தேத்தலம் மூர்த்தியை யேயொன்று சூழ்கருமம்
படர்தரும் பத்தியொன் றமித றைற்றரம் பார்த்துய்ம்மினே. ௩

நான்முகன் றக்கன் முதலோ ரனேகர் நவின்றவட
நூன்முழு துங்கொலை வேள்வியைப் போற்று நுடங்கரிய
வேன்முனைக் கண்ணெளவை வள்ளுவ னாதியர் விண்டதென்னா
வூன்முழுப் பாவ மெனவே யடிக்கடி யோதிடுமே. ௪

வாணிமின் னாள்வலக் கொங்கையொப் பாந்தமிழ் மற்றுமொரு
மாணிளங் கொங்கையொப் பாமா ரியமென்ன வாய்வந்திடார்
கோணிய வெண்பிறைச் சென்னியி னான்மணக் கோலந்தன்னைப்
பாணினி தான்புரந் தானோவென் பார்முற் பகைப்பவரே. ௫

எவ்வகைத் தேவரு மாதவர் தாமு மிமயமென்னு
மவ்வரைப் பாலுற்ற நாளவ ராழியி லாழ்ந்தொழியா
தொவ்வருஞ் செந்தமிழ்த் தாயா முனிவ னுயர்பொதியைச்
செவ்வரை மேல்வந்த வாறெந்த நூல்களுஞ் செப்பிடுமே. ௬

விந்தமென் றுள்ள மலைமீ தெழுந்து விபுதரழச்
செந்தகைச் சூரியன் றேரோ டடாவிதஞ் செய்தவந்நாள்
பைந்தமிழ்த் தேசிக னோவட நூற்றுணைப் பாணினியோ
வந்தடங் கப்புரிந் தான்வேத மாமுனி வாய்சொல்லுமே. ௭

இந்திரன் றன்னொடு வானவர் தாமுநல் லின்பமெய்த
வெந்திறற் சூரனவன் றன்றவம் பாழ்பட வேலையுண்டு
பிந்தியவ் வாறு நிறைவாக விட்ட பிரான்றமிழ்ச்சீர்
செந்திருக் கேள்வனு மீசனுந் தேர்ந்துபின் சென்றனரே. ௮

கணிவண்ண னென்றொரு மன்னவன் சிந்தை கலங்கக் கச்சி, மணிவண்ணன் றன்றிருக் கோயில்விட் டேகி வரச்செய்ததும், பணிவண்ணச் செஞ்சடைச் சொக்கர்முன் போய்வரப் பண்ணியது, மணிவண்ண மெட்டொடு தென்றல்வெற் பீன்ற வருந்தமிழே. ௯

தண்டமிழ் வாசங் கலந்து குலாவுந் தனித்தென்றலு
மொண்டகை யாரியச் சீர்தோயும் வாடையு மூனிலொன்றி
மண்டலத் தோர்க்குத் தரும்பயன் றன்னை மதித்தறிந்து
கண்டவ யித்தியர் வாய்மேன்மை தாழ்மையைக் காட்டிடுமே. ௧௦

பல்கோடி மங்கையர் கண்டுகண் டேங்கும் படியொருக்காற்
புல்கோலத் தீசன்முன் னூரிற் போற்றும் புலவனுள்ள
மல்கோகை வேண்டி யொருவிலை மாதெதிர் வாய்திறப்ப
வெல்கோம ளச்சுவை நீங்காத தாகும் வியன்றமிழே. ௧௧

மந்தரக் கொங்கைப் பரவைதன் கேள்வனு மற்றையராம்
வந்தனக் காரரு மின்புறு மாறு மறைபயிலு
மந்தணச் சேயை யவிநாசி யூரி லழைத்ததெண்ணிற்
சந்தனக் குன்றின் றலைமேற் பிறந்த தமிழ்த்தெய்வமே. ௧௨

எள்ளாத வாதிசை வக்குலத் தோர்மனை யிற்பிறந்தும்
வள்ளாரும் வேன்மன் மகவாயி னானை வயங்குதமிழ்
கொள்ளா வளவி லடங்காத வின்பங் கொடுத்துப்பின்பு
வெள்ளானை யேற்றிக் கயிலாய மீதுற விட்டதுவே. ௧௩

ஆலரோன் புதல்வ ரொருநால்வர்க் காகக்கல் லாலடியிற்
பலநாட் டவங்கண்டு வந்துற்ற மூர்த்தியைப் பன்னுதமிழ்
குலவேந்தர் போற்றும் வழுதி யமைச்சன் குறிப்பறிந்து
மலர்பூங் குருந்தை நிழலூடு தோற்ற வருவித்ததே. ௧௪

அன்போங்கப் போற்றுநர் வேட்கை யெளிதி லடைவதெண்ணி
முன்போர்மு னீச்சுரன் றந்துள தாந்தமிழ் மூரிவிண்ணோ
ரென்போடு சென்னியும் பூண்டிடமத் தாடி யிரப்பவனைப்
பொன்போலு மேனிப் பரிமீது மேறப் புரிந்ததன்றே. ௧௫

எவ்வுயி ருக்கு முயிரா நிறையு மிறைவன் றன்னை
வெளவு மொருவன் றமிழ்த்துதிக் காக்கிழ வந்தியினு
ளொவ்வும் வடிவு மெடுத்துமண் கூடை யுடன்சுமந்து
வெவ்வுர கம்பொரு வேத்திரத் தாக்கு மிலேந்தனனே. ௧௬

வண்மைப் பராசன் மகன்சொலேந் தாமறை வாசகத்தை
யண்மைப் புதல்வன் கரத்தால் வரைவித்த வண்ணலரு
ளுண்மைத் தமிழ்த்திரு வாசகப் பாட லொருங்கெழுதிப்
பெண்மைக் குவகை தருமரங் கூடுறப் பேணினனே. ௧௭

மன்னுந் தமிழிற் றுதிசெய்த மாணிக்க வாசகரும்
பன்னும் பெருமை யுணர்ந்தேத்துங் கீர்த்தனைப் பாவலனுந்
துன்னுங் கதிமற்றை யோரடைந் தாரெனச் சொல்லுங்கொலோ
வுன்னுந் திரைக்கடற் பைந்தானை சூழ்தரு மொண்புவியே. ௧௮

சீகாழி யூர்த்தடம் பொய்கைக் கரையிற் சிறிதழுத
வாகாருஞ் சேய்க்குமை நல்கிய பாலின் மதுரமன்பர்
சோகாந்த காரங் கெடத்தமி ழோடு துலங்கிற்றன்றி
யேகாரத் தின்குறி யில்லாக் கலேயொ டிலங்கிற்றின்றே. ௧௯

வேத வியாசனைக் கைதூக்கி யங்கு விடப்பசர்மெய்ப்
போத முடைச்சங்க ராசா ரியனும் பொருவிலருண்
மாதரி பாலுண்ட செவ்வாய்க் கவுணியன் வண்டமிழ்ச்சீ
ரோதலுற் றுன்வட சொல்லாலென் றூனன் குணர்ந்துய்ம்மினே

அரக்க னமைத்துள்ள வாந்தரத் தோர்க ளதைப்புகழ்ந்தேத்
திரக்கலேக் குந்தல்வி தானு ரியமென்பர் செப்புசொல்லின்
மரக்கவி ஞர்பொதி யைத்தமிழ்ச் சாடை மலியுமதா
லுரக்கரு ணைத்தந்தை தானீதென் றோர்ந்திட் டுரைக்கைநன்றே.

புகலெனுஞ் சொல்லினைப் போலெனச் சொல்வது போ
ற்பலசொல், விகலிந்துத் தாணியுஞ் செந்தமி ழிற்கொண் டியம்
புகின்ற, னகணிலத் துள்ள கலையாவுந் தென்சொல் லதுவு
மெதிர், நிகழ்வட சொல்லுங் கலந்தே விளங்குந் தெரிந்திடினே.

கும்பன் குடத்திற் றமிழ்தோன்றிற் றென்னக் குளறுகின்ற
வம்பருங் கொன்றன்றி வாழா மிலேச்சர்தம் வாயுமிழுந்
தம்பல மேயொக்கு மாரிய மென்னுஞ் சழக்கர்களும்
வெம்பகை யாலிகழ் சண்டாளர் தாமென்கை மெய்ம்மொழியே.

எக்கலை யாலு மிறைவனைப் போற்றின ரெண்ணிலர்தா
மெய்க்கவி ஞர்தமி ழாற்றுதி பாடொரு மென்குருந்திற்
கைக்கனி தாளமும் வெண்முத்துப் பந்தருங் காகளமு
மைக்கக னந்தரப் பெற்றார்மற் றில்லையிவ் வையகத்தே. ௨௪

சுட்டவெள் ளென்பின் குடத்தா டிருந்தொரு தோகைநல்லாள்
கட்டழ கோடு மயிலைத் தடாகக் கரையில்வர
விட்டது செந்தமி ழேயல்ல வோவன்றி வேறுகலை
கட்டவண் செய்ததுண் டேற்சொல்லு வீரிங்கு நன்குணர்ந்தே.

கதிர்பூத்துக் காய்த்துதி ரும்பனை காய்த்துக் கனியுடனங்,
கெதிர்தோன்றச் செய்ததுந் தீயைவென் றிட்டது மேடெதிர்
த்தோர், நதிநீந்தக் காட்டலுங் கூன்பாண் டியனன் னலம்
பொருந்த, வதிகோரச் சாரண ரைக்கழு வேற்று மருந்தமிழே.

எத்திசை யிற்கலை யாதாலும் பற்பல ரீசனுண்மைப்
பத்திசெய் தேத்திப் பணிந்தாலுங் காழிப் பனவர்பிரான்
சித்திபல் கோடி விளையாடி நன்மணஞ் செய்தவன்றே
முத்தியைத் தான மிடச்செய்த வான்கலை முத்தமிழே. ௨௭

வேதங்களி யாவுமொன் றுக்கூடி யீசன் விரைமலர்ப்பொற்
பாதங்கட் காண பலபூசை செய்து பழுதிலரு
ணீதந் துலங்கப் பொருத்துங் கபாடத்தை நீக்கியமைத்
தேதங் களைந்தல கெல்லாம் புரந்தற்ற தின்றமிழே. ௨௮

கடனீரிற் கன்மிதக் கும்படி செய்து களிறுறுக்கு
மடவியாவுங் குன்ற வடக்கிவெந் நீற்றறை யம்புயப்பூந்
தடமாகக் காட்டி யரவா லிறந்த தனையனையு [ழே
முடலோ டெழச்செய்த தன்றே யொருவன்சொ லொண்டமி

காணரி தாய சயிலாயக் காட்சியைக் காட்டியெழிற்
சேணகத் துள்ள மடவாரைப் பொன்னைச் செழுமணிதோய்
பூணனந் தத்தைப் புறநீக்கு மார்வம் பொருத்திமுத்தி
மாணடை யச்செய்த தன்றே யொருவற்கு வண்டமிழே. ௩௰

வருமிக்கு மன்னர் புறங்காட்டத் தாக்கும் வழுதியனை
யொருமிக்கு மின்ப முறக்கிர னெஞ்சக மொல்கவப்பி
லுருமிக்கு நர்க்க மீடுவா ரிலக்கண மூறுபடத்
தருமிக்கு நன்மணஞ் செய்த தொருசெந் தமிழ்க்கவியே. ௩௧

ஆணவ மாதி மலமூன் றுந் தீர்க்கு மருட்பெருமான்
மாணவிர் வீணை யிசைகேட் டுருகி மதுரைநகர்
காண விறகுஞ் சுமந்தா னெனவுங் கழறப்பெற்ற
பாணன் கவியறச் செய்ததுஞ் செந்தமிழ்ப் பாசுரமே. ௩௨

பெத்தானை யென்றும் பிறவாத வீட்டினிற் பேணவருள்
வைத்தாண்ட சிற்றம் பலத்தான்கைச் சீட்டு வரைந்துபெருஞ்
சித்தாடுங் கொற்றங் குடியாற் கனுப்புந் தினந்தமிழே
யித்தா ரணிக்கலை யெல்லாமு நாண வெதிர்நின்றதே. ௩௩

என்னிற் றயில மெனநிறைந் தான்றன் னிடத்திருந்து
கள்ளிற் சிறந்த மொழிபேசு மங்கை கனசபையிற்
றுள்ளித் தவிப்பவன் வாழ்வடை வான்வந்து தோற்றச்செய்த
துள்ளிற் கருதும் பொருள்காட்டுஞ் செந்தமி ழொண்கவியே.

ஆசிப் பசுந்தமிழ்ப் பாமாலை சூட்டுமொ ரந்தணன்முன்
காசிக்குப் போம்பொழு தன்னோன் மகளெனக் காட்சிநல்கி
நேசித் தமுதும் படைத்தா ளுமையென்னு நீடுபுகழ்
பேசிற் பிறகலைப் பாவாணர் யார்க்கும் பெருந்துயரே. ௫௫

மாத்ரா வயிற்றிற் பிறந்தவன் றேசட வாயுவென்னுந்
தீதார்ந் திடாமற் சினந்துண வின்றிச் சிறந்துமலர்
வேதாவு மெய்தரும் பேறடைந் தானும் வியன்றமிழாற்
ருதார் துழாய்நிகர் பாடல்செய் தான்பலர் தஞ்சமென்றே. ௫௬

மீனக் கொடியுடை வேல்வேந்தன் கோயில் வியன்முகப்பாந்
தானத்திற் றூக்கிய பைம்பொற் கிழியைச் சகலகலை
ஞானப் புலவருங் கண்டேங்க வோர்தமிழ் நாவலவன்
வானத் தவர்பன் மலர்தூற்றக் கொய்த வழக்கொன்றுண்டே.

மாமாலை வீழிக் கனியிதழ் வாய்கொண்டு வண்டமிழ்ச்சொற்
பாமாலை யான்மிகப் பாடிய மங்கைப் பருவமுள்ளாள்
பூமாலை சூடிக் கொடுத்து மளவில் புகழ்புனைந்தாள்
காமாலைக் கண்ணிகர் நெஞ்சுடை யாரது காண்பரிதே. ௫௮

வித்தனைத் தென்று பலர்போற்றும் பல்கலை வெஃகினரு
மெத்தனை யோவித மாத்திரு மாலை யிறைஞ்சியதுண்
டத்தனை பேர்களுள் ளாரோனுஞ் செந்தமி ழாற்பரவோர்
பத்தனை யுண்டது போலுண்ணு மேன்மை படைத்திலரே. ௫௯

வண்டமி ழாற்றுதி செய்கின்ற சீர்மலி மங்கைமன்னன்
கண்டன யாவுங் கவருங் களவுங் கனத்தபொய்யுந்
தண்டம்வில் வாள்கொடு செய்யுங் கொலையுந் தவப்பயனு
வண்டரு மெய்தற் கரிதாய வீட்டி லமைந்தனனே. ௨௦

ஆலிலை தன்னி லணிப்பாம் பணையி லசோதையன்னார்
பாலிலங் கேணையிற் றன்வாய் சுவைத்த பதங்களைக்கார்
மாலிக லோசத் தருந்தமி ழான்மிக வாழ்த்துமொரு
நாலியற் பாவலன் வாயும் பருகிட நல்கினனே. ௨௧

பல்கலை போற்றும் வடகலை தென்றற் பருப்பதமுன்
னல்க வருந்தமிழ்ப் பாலிக லெய்தலி னல்லிதழி
மல்கணிச் செஞ்சடை யானுந் திருநெடு மாயவனு
மொல்கப் புறத்துய்த்து ளார்முன்னை நின்ற தொலிக்கவைத்தே.

நனைத்துள்ள வாடை யுலருமட் டோர்கந்தை நல்கியபெண்
வினைத்துயர் நீங்கி யணைமெய்தி மானிடர் வேண்டுசெல்வ
மனைத்துமெய் தும்படி செய்தது மன்றி யரசர்கட்காப்
பனைத்துண்டு மூன்று பழந்தரக் கண்டதும் பைந்தமிழே. ௨௩

கோளத்தை முட்டி வளரும் பொதியைக் குவடுவெப்பத்
தாளத் தனத்தியர் கொண்டாடு மௌவை தமிழெயினன்
வாளற்றை நாள்வெட்டச் சாய்ந்த பலாப்புவி வானறிய
மீளத் தழைந்து கனியாச் சொரியும் வியன்றந்ததே. ௨௪

வளப்படு தாமரைப் புத்தேள் விரிக்கு மறைமுதலா
மளப்பரும் வேதப் பயனுந் தொகுத்திட் டகிலமிசை
சளப்படு மானிட ருய்வான்முன் னூலையிற் றந்தவௌவை
யுளப்பது மத்துந் தமிழ்தோய்வ தோரு முணர்ச்சிநன்றே. ௨௫

எல்லாக் கலைகட்குந் தாயாய்வெண் டாமரை யிற்குலவு
நல்லா ளொருபொற் பலகைய தாகி நறுந்தமிழை
யல்லாது மற்றொன்றைத் தாங்கின ளோவத னாலல்லவோ
கொல்லாத வேதமுந் தோன்றிப திந்தக் குவலயத்தே. ௬௬

பற்பல வாமுல கெல்லாம் புரக்கும் பரமும்விண்ணிற்
சொற்பயின் றொப்பிய நான்முனிக் கூட்டத்தின் றொல்லாசா
விற்பனக் கும்பன் றவநேர் தமிழில் விளங்கிற்றன்றிக்
கற்பவர் கற்குங் கலையாதி னூடெங் கவின்றதின்றே. ௬௭

செந்தீகைத் தாமரை யானும்வெண் டாமரைச் சேயிழையு
மிந்த வுலகி னிடைபுணர்ந் தீன்ற வெழுமகவும்
வந்த வுடன்றமிழ்ப் பாவே நுவன்ற வகையுணர்ந்தோ
ரெந்த விதத்தின்மற் றோர்கலைக் கேற்ற மியம்புவரே. ௬௮

ஆரன்றிக் கொன்றையுஞ் சூடும் பிரானை யருந்தமிழா
லீரம் பொலியத் துதித்தத னாலன் றெழிற்றிருவா
ரூரன் றயைபெற் றவனேறும் வெண்களிற் றோடுறவாய்ச்
சேரான் குதிரை மிசைபோய்க் கயிலையிற் சேர்ந்தனனே. ௬௯

செந்தமி ழாலொரு சீதக் களபச் செழுமகவற்
றந்தமொன் றுள்ளமுன் றேனமிசை பாடிய தன்மையினாற்
சுந்தர மூர்த்தியுஞ் சேரர் பிரானுந் துணுக்கமுற
வந்தண் கயிலையிற் சென்றிருந் தானெள்ளவை யக்கணத்தே. ௭௰

பருப்பதத் தோடொரு பேயையுஞ் செற்றுப் பதைபதைத்தாங்
கிருப்பவ ராயிரம் பேரையுங் காத்தின்னு மேத்துமவர்
விருப்பரு ளத்தகு பாமாலை யொன்றையு மேதகுசீர்த்
திருப்பரங் குன்றி லொருதமிழ்ப் பாவலன் செய்தனனே. ௭௧

HAMAHODARUVAVA

மழலையங் கிள்ளை யனையார்தஞ் சிற்றிடை மாமிசத்திற்
பழகுநர் தந்தவ மேநிக ராமெனும் பைந்தமிழ்நூல்
கழகம தூடொரு பாவலன் கூறிடற் காதுறக்கேட்
டழகிய சொக்கர்தஞ் சென்னிபல் காலு மசைத்தனரே. ௫௨

ஆரூரின் மொத்துண்டு செத்தாற் குயிர்நல்கி யன்னையினு
னீரூரும் வாழையிற் றீமூட்டிக் கச்சியி னிக்தைசெய்தோன்
பேரூன் வயிறு பிளந்துகைப் பாகிய பேய்க்கரும்புஞ்
சீரூர்தென் னொற்றியிற் றித்திக்கச் செந்தமிழ் செய்ததன்றே.

அழுதேங்கி நஞ்சிட்ட வக்காண் மனையி லனற்கொளுத்துக்
கழுமரந் தீப்படக் கண்டு பயறு கடலையெனக்
குழுவிய பாலர்க்கு மண்ணள்ளி யிட்டுக் கொதிகடற்பால்
விழுமிய லிங்கமு மாறொன் றொருதமிழ் வித்தகனே. ௫௪

எக்கால மென்று தமிழாற் பரவ லெழிற்குருவான்
மைக்கால வாதனை நீக்கித்தன் னையுநன் மங்கையுரு
வக்காலங் கொண்டு கதிசேரச் செய்த வதிசயத்தை
யிக்காலத் தும்புவி யிற்பலர் கூடி யியம்பலுண்டே. ௫௫

அல்லையொப் பாமிடற் றாதிக்குச் சோழ னமுதுகைத்து
முல்லையிற் கேழ்வர காலட்ட கூழ்ச்சுவை முந்தச்செய்து
தொல்லை மறைநலத் தந்தணர் பற்பலர் சூழ்ந்துவப்பத்
தில்லையிற் றேரு மிழுத்தது சேந்தன் செழுந்தமிழே. ௫௬

வேலையுங் குன்று மவுணருந் தீயவை வேல்விடுத்துச்
சேலையொப் பாம்விழித் தெய்வானை தோள்புணர் சேந்தனந்நா
ளாலையின் பாகன்ன செந்தமிழ்ப் பாட்டொன்றி னோசையினுற்
பாலையின் முட்டை யெனப்போன வாறு படிசொல்லுமே. ௫௭

அத்தனை வேதமுஞ் சொன்னான் றனைப்புடைத் தாலடியி
ணித்தனை யாண்ட முழுப்புல வோனு நெடுந்தவத்தின்
வித்தனை யான்றருஞ் செந்தமிழ்ப் பாடலின் வேட்கைமிஞ்சி
யெத்தனை தொண்டர்கட் கோதுதி தானு மிசைத்தனனே. ருஅ

அண்ணா மலையி லொருதமிழ்ப் பாவல னன்றுகுகன்
விண்ணாடுந் தோகை மயின்மேற்கற் றூணில் விளங்கச்செய்து
கண்ணா மவையொரு மன்னனுக் கீந்து கருத்திற்சற்று
மெண்ணாப் பகைவ னுயிருண்டு பேரின்ப மெய்தினனே. ருகூ

செத்துக் கிடந்த சினையாடுய்ந் தினவுஞ் செம்புலிவாய்
வைத்துக் கடித்த பசுமீண்டு வாழவும் வம்பனொரு
குத்துப் படவுங் குருடா யொருவன் குலைவுறவு
முத்துப் பொருதமிழ்ப் பாட்டொரு ஞானி மொழிந்தனனே.

அம்பலத் தீசன் றிருவுரு நாடக மாடிடவுங்
கம்பணி காதன்ன நீத்துக் குருவிற் கவின்றரவும்
வம்பவிர் கொங்கைக் கயற்கண்ணி யன்னமுன் வந்திடவுஞ்
செம்பவ ளக்கனி வாய்த்தமி ழாற்செய்த சித்தனுண்டே. சுக

காளிதன் றேரிற் கனல்பற்றி வேவவுங் கந்தன்வந்து
தாளிணை போற்று மொருவனுக் காநயஞ் சாற்றிடவு
மாளியொப் பாமொரு துட்டன் கணத்தி லழிந்திடவுங்
கோளில னுமொரு சைவன் றமிழ்ச்சொற் குலாவியதே. சுஉ

மறுத்தவிர் முத்தி நிலையீதென் றாய்ந்து வகுத்ததனாற்
கறுத்தநெஞ் சாளர்க் கிகலாந் தவசி கவின்றமிழாற்
செறுத்தெமன் றன்னையென் றன்பனைக் காத்த தியாகர்தந்தேர்
நிறுத்தவு மோர்சொன் னடத்தவு மோர்சொன் னிகழ்த்தினனே.

மகாமகோபாத்தியாய

ஆமைக் குளவுறுப் பென்னப் பொறிக ளடங்கநின்று
மாமைப் புயல்வண்ண மாலென்ன வார்புவி வாழ்வுகண்டு
தீமைக்குச் சத்துரு வாவார் பராவிய செந்திலிலோ
ரூமைக் குழந்தை யருளாற் பயின்றிட்ட தொண்டமிழே. ௬௪

மாயிரு ஞாலத்து மன்னவர் போற்றும் வளவன்மணிக்
கோயின் முகப்பிற் றறிபட்டு வீழ்ந்தகைக் கோளர்தலை
யாயிர மொன்றும் படிபாடி ஞானு மரியதமிழ்
வாயின னல்லது மற்றோர் சவையில் வாணனன்றே. ௬௫

அப்பாரி வேழ மசையாது நிற்ப வசனின்மன்னன் [ன்
வெப்பா குலங்கொள்ள நிந்தையொன் றேங்க மிசையிருந்தோ
செப்பாட றேடித் தியங்குமவ் வேளையிற் சிற்றிடையார்
தப்பாற் சிறையிருந் தோன்றன்னை யாளத் தமிழ்வந்ததே. ௬௬

கொசகங் கந்தன் சபத்தாற் புலையு மியல்படைந்து
வாகார் களரீசப் பொருளோர்ந்து செப்பிடை மாழைநல்கிப்
போகா மயக்கினன்: புந்தியைச் சீர்செய்து போரியிற்சி
தாசாசப் பேருடை யோன்வாழ வைத்த தருந்தமிழே. ௬௭

அண்டிய தொண்ட ரறுபத்து நால்வரை யச்சமறக்
கொண்டிடு ஞான விழியாற் பருகிக் குறைவில்பதத்
தெண்டிசை யோரு மறிய வொருவ னினிதடைந்தான்
பண்டியற் பாடலொன் றாற்செந்தில் வேலனைப் பாடலினே.

கடவூர் மயானத்தொ ரந்தணன் புந்திக் கலக்கத்திரு
லடல்வேந்தன் றன்னெதிர் சொல்லிய வண்ண மமலைதன்கா
திடலாய வோலையொன் றூன்மதி தன்னை யிருட்டிரவிற்
றிடமா வுதித்திடக் காட்டலுஞ் செந்தமிழ்ச் சீர்விளைந்தே. ௬௯

கச்சியின் சைவப் பிராமண னன்று கனசபையி
னச்சிய பாவலர் சொற்கேட்டு நெஞ்சக நாணுமன்று
பச்சிளங் கொங்கைக் குறமாது கொண்கனோர் பாவலனை
மெச்சியின் பந்தரச் சென்றதுஞ் செந்தமிழ் வென்றியதே. ௭௦

தன்னுடைச் சீடன்ற னாவியைக் காத்தொரு தையனல்லா
ளின்னுத ரத்தின் மகவாக்கி யாண்டு மிலங்கருட்சீர்
துன்னுறச் செய்துள்ள தாயோ னொருவன் றனைக்கொளலும்
பன்னு தமிழ்க்கலை யேயென்னும் வார்கடற் பாருலகே. ௭௧

தேவாதி தேவன் றிருநட மாடிய தில்லைமன்றுண்
மூவா யிரவருங் கண்டுவெப் பெய்திட முள்ளெயிற்றுத்
தீவா யரவக் கடியா லிறந்துள்ள சேய்தமிழ்ச்சொற்
பாவாற் பிழைத்த விதமறி வாண்மலர்ப் பாரதியே. ௭௨

காயுஞ் சினத்தொடு சோழனந் நாட்செய் கபடமஞ்சா
தாயுந் தமிழ்ப்புல வோனொரு வீட்டு ளறைந்தகவி
வாயும் பிளந்து முகில்போ லுருமிப்பின் வாலெடுத்துப்
பாயும் புலியைப் பதினாறு துண்டு படச்செய்ததே. ௭௩

கட்டிக் கரும்பொடு செந்தேனு நாணுங் கவின்றமிழா
லொட்டிப் புலவ ரிருவர்முன் பாடு மொருகவிக்காச்
சிட்டித் தொழிலுடை யான்மனை யாட்டி தெருவில்வந்து
கொட்டிக் கிழங்கெனப் பல்கால் வலைச்சியிற் கூறினளே. ௭௪

முன்னை மறையின் பொருடேர் வசிட்ட முனிமுதலோ
ரன்னையிற் சேர்த்த வபிமான ராக வரசுரிமை
தன்னை நடத்துந் தபனன் குலத்தைத் தமிழ்க்கவியோன்
றென்னைசொல் வேனைய கோவறு மாறன் றியற்றியதே. ௭௫

காவலன் றன்மகண் மேன்மய லாகிக் களவில்வரும்
பாவலன் பாடிய வெண்டமிழ்க் காமலர்ப் பாரதியாள்
பூவார சொன்றி னடியிற் பயற்றைப் புதுநிலவில்
வேவவைத் தாளென்ன வேயுல கோது மிகைபடவே. எ௬

மரத்தாற் செயுமயில் வாய்பாம்பை விட்டது மாறிமுன்போ
லுரத்தா லெடுத்ததும் பூமாலை கொய்தது மூன்றனித்து
விரற்பூ ணளித்தது மேகஞ்சொற் கேட்டதும் விக்கிரகக்
கரத்தாரும் பூஞ்செண்டு பெற்றதுஞ் செந்தமிழ்க் காரியமே. எஎ

தீதைத் தவிர்த்து நலமே விளைக்குஞ் சிவன்மகிழு
மாதைக் கலம்பகஞ் சொல்லிய வாறொரு மாநதிநீர்
வாதைப் புரியு மவர்நாணச் செய்திட்ட வண்மையுஞ்சிற்
றாதைப் பொதியைத் தமிழாண்மை யென்றுல கோதிடுமே. எஅ

தேவர் முனிவர் மனிதர்முன் னாகத் திகழுமவர்
யாவரும் போற்று மிபமா முகத்தெந்தை யேசிலிரு
பாவலர் தங்கைப் பணங்கவர்ந் தோர்தமிழ்ப் பாட்டணிகை
நாவலந் தீவிற் பகர்வா ரனேகரெந் நாளுமுண்டே. எ௯

விண்மாரி யொப்பக் கொடுப்பானைப் போன்றொரு வேட
மிட்டுக், கண்மாரி பெய்யப் புலவோ ரனேகரைக் காவல்செய்
தோன், றிண்மா ரிடிவின வும்பாம்பி லேங்கிச் சிதையுமட்டு,
மண்மாரி காட்டிய தந்நா ளொருவன்றன் வாய்த்தமிழே. அ0

கருமுகில் வண்ண னரங்கத்துக் கோயிலிற் காத்திருந்து
பெருமடைப் பள்ளிப் பணிசெய்கு வானைப் பிறங்குதமி
ழருமைய வாய விளையாட் டனந்த மளித்துவென்றித்
திருமலை ராயன்றன் சிங்கா தனத்துறச் செய்ததுவே. அக

பள்ளிக்குள் ளஞ்சிப் பதுங்கும் வயிணவப் பையனுக்குக்
கொள்ளிக் கனலிற் கொடிதாய வாக்குக் கொடுத்துலகிற்
றுள்ளிக் களிக்கின்ற பொல்லார் பலரைத் தொலைத்ததரன்
வெள்ளிக் கிரியை நிகராம் பொதியை வியன்றமிழே. ௮௨

பொன்னாடை மாயவன் போற்றிய சேதுக்குப் போய்வருமட்
டென்னாசை மாதுக்குக் காவலின் றென்றிரண்டுதெய்வஞ்
சொன்னான் றமிழ்க்கவி பாதியி லைது தொல்லுலகி
லன்னான் வருமுன் பலபேரைக் கொன்றதொ ரற்புதமே. ௮௩

தூண்டா விளக்கில் வருந்துப்பி போற்பலர் துஞ்சினரென்
றாண்டான் றனது கவியாண்மை கூறின னந்தமொழி
வீண்டானென் றெள்ளி விடேன்மின்கள் சத்திய மேதினியீ
ரேண்டாங்குஞ் செந்தமிழ்ப் பாவாணர்க் கஞ்ச விளப்பமன்றே.

தந்தை தலையை யுடைத்துத் தமையன் றலைவதைத்துப்
பந்தையொப் பாமுலை மின்னா ரனேகரைப் பாழ்படுத்தி
நிந்தையைச் சற்று மதியாதொர் பாவல னீணிலத்திற்
சிந்தை மகிழ்ந்தலைந் தான்றமிழ் வீரஞ் சிறக்கவென்றே. ௮௫

ஆறாயி ரந்தமிழ்க் கீர்த்தனை பாடி யரியமயி
லேறாறு மாமுகத் தோர்க்கும ரேசற் கினிதணிந்திட்
றோருங் கண்கண் மலர்போற் றுலங்கு முறுதிபெற்று
மாறாத கீர்த்தியு முற்றான்முன் முத்து வயிரவனே. ௮௬

செந்தமிழ்ப் பிள்ளைக் கவிவேண்டி யன்று திருச்செந்தில்வாழ்
கந்த னொருவன் கனவூடோர் பாட்டுங் கழறியப்பா
லந்தப் பனுவற் கடகென்றோர் பூணு மளித்தவித
மிந்த வுலகத் துரைப்பா ரனேகருண் டென்றைக்குமே. ௮௭

தூண்டரி கக்கொடுங் கோன்மன்னர் கண்டு துணுக்கமுற
விண்டலத் துள்ள புலவோர் பலரும் வியந்துரைப்ப
மண்டலத் தோர்கள் வணங்கப் புளிய மரத்தின்கொப்பைத்
தண்டமிழ்ப் பாடலொன் றந்நாள் கணத்திற் றறித்திட்டதே.

பந்திற் றிரண்ட முலைப்பேதை துன்பம் பரிகரிக்கச்
சிந்தித் துவந்து திருமந் திரத்துத் திறற்புலவோன்
வந்தித்த செந்தமிழ்ப் பாடலொன் றூலலை வாய்மருவுஞ்
செந்திற் குமரன் றிருச்சந்நி தானத் திரையற்றதே. ௯

ஆரயித் தெட்டண்ட மந்நாளி லாண்ட வவுணனிடம்
போயிகற் றூது புகன்றோன் றமிழிற் புகழுமெழில்
வாயினன் பெற்ற மகளார்வ மெய்த மறிகடலூர்
பேயின னென்னி லதன்சீ ரெவர்க்கும் விரிப்பரிதே. ௰

குருகைத் தெருவிற் சிவிகையின் மேற்செலுங் கொள்கையினோ
னருகுற்றோர் வேதியன் கைப்பூடிக் கேட்க வன்றமிழாற்
றிருவொத்த மங்கையர் கொங்கைக்குங் கண்கட்குஞ்சீர் நுதற்கு
மருவத் தகுமண்ணி தென்றுனென் பார்பலர் வையகத்தே. ௧௧

ஈரம் பொருந்தத் தமிழாற் றுதிக்கு மெழிற்புலமைக்
காரன் கலியறச் செய்வது நாடிக் கதிரயிற்கை
வீரன் றனது பெருமையெல் லாம்விட்டு விட்டொருக்காற்
சேரன் கனவி னிடைதூத னுமெனச் சென்றனனே. ௧௨

முச்சிலுஞ் செங்கைக் கழங்குங்கொள் வார்தம்மை மூரிச்சிறார்
மெச்சிய சிற்றில் வியன்வீதிச் செந்திலின் மேயசெவ்வே
ணச்சிய வாறு தமிழாற் றுதிக்குமோர் நாவலன்றன்
னெச்சிலுங் கீழ்விழ லாகாதென் றூடையி லேந்தினனே. ௧௩

எட்புவ னத்தெங் குலத்தோர்க ளானு மிசைக்கரிய
மெய்ப்புகழ்ச் சாதனம் பெற்றா லரசரின் மேலெனுஞ்சொல்
லொப்புகி லார்நிந்தை யாற்றாதந் நாளி லொருபுலவன்
செப்புசெஞ் சொற்றமிழ் பூற்செந்தில் வேலன் றிரும்பினனே.

வெங்கனற் கோப மிலேச்சர்தம் மாணையின் மேவிநொந்து
தங்கள்கண் வாழ்வது நாடிப் பெரிது தவித்தவருக்
கங்கயற் கண்ணி யருளா லொருவ னறைந்ததமிழ்
சங்கடந் தீர்த்த தறியு நெல்வேலித் தடாகமொன்றே. ௯௫

அத்தனை யொத்துத் தவத்தோர் பலர்க்கு மரசனென்னும்
வித்தகப் பேர்பெற்று வீறார் பொதியையின் மேயமுனி
முத்தமொப் பாளரு ளாற்செய்த தாந்தமிழ் மூதுலகத்
தெத்தக வோரையுந் தேவர்தந் தேவ ரெனச்செய்யுமே. ௯௬

தமிழுணர் பாவலன் போல்வா ரொருவன் றனதுகலை
யமிழ்தினு மேற்றமென் றேமாப் புறும லயற்கலையா [கற்
றுமிழ்வதென் றொப்பிடின் மற்றோர் மடந்தைக் குரியகொண்
குமிழ்மலர் நாசியி னான்முகந் தாணிகர் கோதினனே. ௯௭

சொற்சுவை யாதிய வெல்லா மறிந்து துகளிலவா
நற்சுவைப் பைந்தமிழ்ப் பாமாலை யாவு நவிலுமவன்
பொற்சுவை யாளர்க் கெமன்போற் குலாவும் புகழிலனேற்
புற்சுவை யுண்டறி யாப்பசுப் போலும் புரையினனே. ௯௮

பத்தித் துறையி னிலையார் தவமும் பழுதிலருட்
சித்தித் திறமை விழையார்தங் கல்வியுஞ் செய்யதமி
ழுத்திப் பெருக்கத்தி னாற்சமைத் தானுக் குரிமையில்லார்
கத்திப் பயில்வன வேயென்று நாடொறு நாஞ்சொல்வமே. ௯௯

எண்வகைச் சந்தமும் பாடுந் திறமு மிகலவரை
விண்வயிற் செல்ல விடுக்கின்ற சத்தியு மெய்யருளுங்
கண்வரு காட்சியுந் தோயும் பெருமைக் கவிஞர்வென்றி
தண்வளிச் சாரற் பொதியைமுன் னீன்ற தமிழ்க்கழகே. ௧00

முற்றிற்று.

## நூன்மாட்சி.

மலங்கா மனத்திற மில்லாமற் செல்வர்தம் வாயிறொறுங்
கலங்கா விரக்குங் கவிப்புல வீரயிற் கந்தனரு
ணலங்கா தலித்துள்ள நானிந்த வாறு நவின்றதமி
ழலங்காரத் தின்கவி நூறுங் கருதி யறிந்துய்மினே.

தெய்வமேதுணை.

---

உ

குருவேதுணை.

## தமிழ்த்துதிப்பதிகம்.

காப்பு.

சட்சமயத் தேவரையுஞ் சந்தமுன் றோற்றுதித்தே
னெட்சரியென் றேனு மிரங்கிலார்—பட்ச
மொருசிறிது வைத்தெனக்கா முண்மைதர வேண்டு
மிருமைநலந் தோய்ந்ததமிழே.

3199
(8268)

## தமிழ்த்துதிப்பதிகம்.

### நூல்.

அனக மாகிய சித்தியு முத்தியு மடியே
னுனது தாரகத் தாற்பெறக் கருதலோர்ந் துதவாய்
சனக னாதியர்க் கருளிய சிவனிகர் தவத்தோன்
மனம தாற்றுற மலயமேல் வந்தசெந் தமிழே.

கவலை வாரிதி யிடைப்படு தமியனேன் கருத்திற்
றவமு மெய்யரு ளாண்மையும் பொருந்திடத் தாராய்
பவள வாய்ச்சிறு மாணிகர் பரவைபாற் பரம
சிவனோர் தூதெனச் செல்லவுஞ் செய்துயர் தமிழே. ௨

பாலும் வாய்வழி வழிதர மரிப்பவர் பலர்போன்
மாலுஞ் சோகமு மலியநான் வருந்திடத் தகுமோ
வாலும் வாரியுந் துயில்பவன் போய்வர வந்நா
ளோலு மெய்ப்புக ழொடுமிகப் படருமொண் டமிழே. ௩

எனது நெஞ்சகத் திலங்குறு சாதமுற் றெய்திப்
பனக மேந்திய படியுயப் பார்ப்பதுன் பரங்கா
ணுனது மேன்மைகண் டுமையவ ளொருகவிப் புலவற்
கனமு நல்கியன் றுடன்செலச் செயுமருந் தமிழே. ௪

கொவ்வை வாய்ச்சிறு வனிந்தயர் மயலிடை குளிப்பேன்
றெவ்வை நேர்மிடிப் பிணியறச் செய்திடற் கிரங்கா
யௌவை யாரைமுன் கணபதி கயிலையி லமைப்பச்
செவ்வை யார்தொனி விளைத்திடுந் தெய்வதத் தமிழே. ௫

எந்த வேளையு நின்சுவை கருதிடு மியானும்
பந்த வேதனைப் படுவது முறைகொலோ பகராய்
யந்த நாளொரு குன்றமு மலகையு மழியக்
கந்தன் வேற்படை விடும்படி கவின்றரு தமிழே. ௬

அமையு மென்மனத் தாவலெல் லாமுடித் தப்பாற்
கமைகு லாவிய ஞானமுற் றுய்யும்வழி காட்டாய்
குமையு மானிடத் திரளெலாங் கொணர்ந்துநின் றுய்யுஞ்
சமய மேயெனப் பன்னிரண் டுயிர்கொள்ளைத் தமிழே

விரிய மேதினித் தலையெனை வெருட்டுறு மிடிபோ
டரியை நேர்புக ழுறவிழைந் திடலுறு லலவோ
ரிதி யாதிய மூச்சுட ராமெனப் பார்க்கிற்
றெரிய மாய்தவக் கரத்தொடு திகழ்தரு தமிழே ௮

விதியை வென்றுயர் மெய்த்தவத் தினர்சிறை மேவும்
பொதியை வெற்பினிற் போய்வரும் புகழுறப் புரிவா
டதிப வாங்கலைப் பருப்பெயரா மங்கமென் பதனாற்
பதினெண் மெய்யொடு பார்மிசை திகழ்பசுந் தமிழே ௯

சமமை நின்புகழ்க் கடலிடை வீழ்ந்தினர் தமரா
மிம்மை வாழ்வுறத் தமியனேற் கொருசிறி திரங்காய்
செயமை வெண்மையாய்க் கருமையு மாய்த்திரு முதலா
மும்மை மாதரிற் றிகழ்தரு முதியமுத் தமிழே ௧௰

நீடு சீர்த்திரு நெல்லையி னிலவிய சிறுவன்
பாடு முத்தமிழ்க் கலையினைப் பழிச்சுமிப் பதிக
மோடு கொள்ளினு முயர்முடி கொள்ளினு முலகோர்
நாடு மெய்ப்புகழ்க் கடலினை நல்கிடு மன்றே ௧௧

முற்றிற்று.

தெய்வமே துணை.